www.padippakam.com

# சங்கமம்

## SANGAMAM

No: 22
மலர்: 22
DEC: 93




ISSN 0905-6246

படிப்பகம்

www.padippakam.com

# சங்கமம்

உள்ளடக்கம்
INDHOLDER.

Sri Lanka rystet..
புத்திஜீவிகள்..
பின்னணவார்..
சிந்தனை...
ஆபி அழகு...
சுதந்திரம்...
இன்றைய...


வெளியிடுபவர்கள்
டெனிஷ்—தமிழ்
தோழமை ஒன்றியம்

பத்திரிகைப் பொறுப்பாளர்:

ற்ரோல்ஸ் ஜோகன்சன்
ஆனந்தன்.G
பத்திரிகைக் குழு
S.சுப்பிரமணியம்.
V.K.சுரேஸ்
S.S.பாஸ்கரன்
S.K.மனோகரன்


# SANGAMAM


Udgiver
Dansk-Tamilsk
Venskabsforening
Ansvarshavende:
Redaktoer:Troels Johansen
Anandan.G
S.K.manoharan
V.K.Suresh
S.S Baskaran
S.Subramaniam
ISSN 0905-6246
Institutionsabnoment:
Kr.50

ISSN :-

# Sri Lanka rystet efter tamil-angreb

## TOKYO

Af BO GUNNARSSON
*Informations korrespondent*

12. nov. – Kampfly bombede fredag store områder på Jaffna-halvøen på Sri Lankas nordspids, men hæren blev tvunget til at opgive alle forsøg på at undsætte de omkring 1.400 soldater, der overgav sig eller flygtede fra militærbasen Pooneryn efter tamilernes overraskende stormangreb natten til torsdag.

Mindst 250 regeringssoldater blev dræbt, mens de Tamilske Tigre, LTTE, angiver sine tab til 93. Flere end 500 soldater er flygtet ind i junglen, der kontrolleres af de tamilske oprørere, og soldaternes skæbne er ukendt.

**Luftbro**

Hæren oprettede fredag en luftbro til Palaly-basen 30 km nord for Pooneryn, og flere tusinde soldater menes at være blevet forflyttet fra østprovinsen. Men angreb fra tamilerne umuliggjorde alle forsøg på at landsætte tropper i nærheden af Pooneryn-basen.

Regeringstropperne forbereder et angreb på basen, men den vil blive yderst vanskelig, fordi de Tamilske Tigre har erobret kanoner, kampvogne og enorme mængder af våben og ammunition. Hundreder af guerillasoldater menes også at være på vej mod basen.

> 250 regeringssoldater dræbt under Tamilske Tigres stormangreb på militærbase – angrebet skaber frygt for nye selvmordsaktioner i hovedstaden

Pooneryn-basens fald er det største nederlag for regeringshæren i den lange krig, der har krævet omkring 20.000 menneskeliv og nu truer med at dele det tidligere turistparadis.

**Chokeret**

Nyheden har chokeret det singalesiske flertal i Syd, der for nylig fik den besked fra præsident D. Wijetunga, at Tigrene – som han kaldte terrorister – ikke længere udgjorde en trussel mod hæren.

Mellem 500-1.000 guerillaer deltog i det natlige angreb på Pooneryn, og effekten har været endnu kraftigere end mordet på præsident Ranasinghe Premadasa den 1. maj i år, som Tigrene menes at stå bag.

Fredag var der nærmest en stemning som under en belejring i Colombo og andre byer. Mange frygter nye angreb og selvmordsaktioner i hovedstaden, og der er udgangsforbud om natten. Alle biler gennemsøges ved utallige vejspærringer, og flere end 1.000 unge tamiler er blevet arresteret de seneste måneder i Colombo.

Det blomstrende turisterhverv, der er afgørende for Sri Lankas økonomi, men som praktisk taget lå stille i årene 1987-91, er igen truet.

தகவல்:- 7 page

www.padippakam.com

# புத்திஜீவிக்கு....

## குந்த ஒரு குடிநிலம்

- வியாசன்

வெறும் சடப்பொருளான மண்ணுக்காக
எத்தனை சாவுகள்?
ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு
ஊடகமான மொழிக்காகவா
இத்தனை மரணங்கள்?
இப்படி அங்கலாய்ப்போர் இருக்கின்றனர்.
இந்தப் போரினால் இறந்து
போனவர்களுக்குள்ளே
எத்தனை 'பாரதிகள்'

எத்தனை 'மாக்சிம் கார்க்கிகள்'
எத்தனை 'டால்ஸ்டாய்கள்'
எத்தனை 'மார்க்கோனிகள்'
இன்னும்
'ஐசாக் நியூட்டன்கள்'
'மேரிகியூரி' அம்மைகள்
எத்தனை பேர் இருந்தார்களோ?
அத்தனைபேரும் அழிந்துவிட்டார்களே!
இப்படி மூக்கு நீர் சிந்தி
முட்டைக் கண்ணீர் வடிப்போருண்டு.
விரிந்த இந்த உலகமே
மனிதன் வாழ்வதற்காகத்தானே
இதில் தமிழனுக்கு தனிநாடு வேண்டுமா?

www.padippakam.com


இப்படிக் கேட்போர் இன்றும்
இருக்கின்றனர்.
கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு
முன்தோன்றியது தமிழென்றால்
அந்த முதற் தமிழன்
காலெடுத்து நடந்த நிலம் எது?
அவன் மலம் கழித்திவிட்டு கழுவியது
எதனால்?
இப்படி அங்கதம் கமழ ஆரவாரிப்போர்
உண்டு.
எல்லாவற்றையும் சேர்த்துக் கோத்தால்........
இவர்கள் எழுப்புவதும்
எதிரொலிப்பதுவும் என்ன?
சரியாக நிலம் வெளிக்காத
"இளம்காலைப் பொழுது"கள்
பகலாகாது இரவானது கொடுமையாம்.
சரி,
அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்.
ஆனால்.....
"உயிர்ப்புடன் பிறந்தவை யெல்லாம்
போராடுகின்றன"
இந்தத் தத்துவம்
இவர்களுக்கு மட்டும்
புதைந்துபோன செப்பேடுகள் ஆனது
ஏன்?
போராட்டம் பூப்பறிக்கும் வேலையென்று
இவர்களுக்கு பாடம் கற்பித்த பரமபிதா
எவன்?
குருதி சொரியாது உரிமை பெற்றதுக்கு
ஒரு உதாரணம் சொல்லட்டும் பார்க்கலாம்.

படிப்பகம்

'தமிழீழம்'
இவர்களுக்கு கனவாக இருக்கலாம்
கைகளில் எட்டாத வானமாக இருக்கலாம்
போராடும் எங்கள் மக்களுக்கு
கையள்ளி மகிழும் காலடி மண்தான்
எட்டிப்பிடிக்கக் கூடிய தாயின் மடிதான்
விரிந்த காலுடைய "கும்பிடு பூச்சி"களான

இவர்களுக்கு
ஆபிரிக்கா அத்தை வீடாகவும்,
அமெரிக்கா அக்கா வீடாகவும் இருக்கலாம்.
எங்கே, இந்தச் சர்வதேச வாதிகள்
அத்தை வீட்டுக்குள்ளே.....
அனுமதியின்றி நுழையட்டும் பார்க்கலாம்?
இவர்களுக்கு
உலகம் ஒரே கூரையின் கீழ் உறங்குகிறதாம்
ஆனால்
கூரை ஒன்றானாலும்
குடியிருப்புக்கள் வேறு வேறு என்பது
இவர்களின் அகராதியில் மட்டும்
அச்சழிந்து போய்விட்டதா?
'தமிழீழம்' வெறும் மண்ணாகவா
இவர்களின் கண்களுக்குத் தெரிகிறது?
இந்த மண்ணில்தானே
எங்கள் நூறு தலைமுறையே புதைந்து
கிடக்கிறது.
மூன்றடி தோண்டினால் போதுமே
நம் முன்னோர்களின் எலும்புக் கூடுகள்
தலை நிமிர்த்தும்
இங்கு வீசும் காற்று வெறும் காற்று மட்டும்
தானா?

எங்கள் பரம்பரையின் மூச்சும் அதில்
கலந்திருப்பது
இவர்களின் சுவாசத்துக்கு ஏன் தெரியாமல்
போனது?
முற்றத்தில் நிற்கும் பாலமரத்தைக் கீறினால்.....
வடிவது பால்மட்டும்தானா?
எங்கள் முந்தையரின்
குருதியும், வியர்வையும் கொப்பளிப்பது
இவர்களுக்கு மட்டும் ஏன் தெரியவில்லை?
எங்கள் கோவில் வீதிகள்
வெறிச்சோடிப்போன வெறும் வெளி
மட்டும்தானா?
யார் சொன்னது?
எமது பாட்டன் இராமன் வேடம் தரித்து
மேடையில் நின்ற போது
பாட்டி தன்னை சீதையாக உருவகித்து
மனதுக்குள்ளே.....
மாயமான் கேட்டு நின்ற மண்ணல்லவா?
எப்படி எங்கள் தாய்நிலமும்
அரபுப் பாலைவனமும் ஒன்றாக முடியும்?
இவர்களுக்கு எல்லைகள் தொல்லைகளாக
இருக்கலாம்;
ஆனால் எல்லாவற்றுக்கும் எல்லை
இருக்கின்றனவே!
கடலுக்கு நிலமும்
நிலத்துக்கு கடலும் எல்லைகள் ஆகும்போது
எங்கள் தாய்நிலத்துக்கு மட்டும்
வேலிகள் வேண்டாமா?
வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாட்டின்
பின்னர்
சாணிமெழுகிய திண்ணையில்
சரிந்து படுக்கின்ற இன்பம் இருக்கிறதே

இது இங்கின்றி
வேறு எந்த மண்ணில் ஏற்படும்?
தாய்மடிதானே சந்தோஷம்.
அழகில்லை என்பதற்காக
என்னைப் பெற்ற ஆச்சி
எப்படி அடுத்த வீட்டுக் கிழவி ஆக முடியும்?
அழகானவள் என்பதற்காக
அடுத்த வீட்டுக் கிழவி
என்னைப் பெற்றவள் ஆக முடியுமா?
ஊத்தை உடுப்பென்றாலும்
ஆச்சியுடன் ஒட்டியிருக்கும் சுகமிருக்கிறதே
அதைவிடச் சுகம் எதுவுமே இல்லை.
'சப்த சமுத்திரங்களு'க்கும் சொந்தம்
கொண்டாடும்
சர்வதேச வாதிகளுக்கு
மட்டக்களப்பு வாவியின் மகிமை தெரியாது
'நைல் நதி தீரமும்' நமதென்று
சொல்பவர்களுக்கு
கீரிமலைக் கேணியின்
ஊற்று நீரின் உன்னதங்கள் புரியாது.
'அல்ப்ஸ் மலை' அழகுதான்
அதற்காக
கோணமலை கோரமலை ஆகிவிடாது.
எங்களுக்கு.....
பாய்விரித்துப் படுத்துறங்கவும்
அச்சமின்றி ஆடிப்பாடவும்
குந்த ஒரு குடிநிலம்
சொந்தமாக வேண்டும்.
"எல்லை போட்ட கொல்லை"
இதுதான் எங்கள் குறிக்கோள்!

**

### Kultfigur

Tigrene slår altid til i den anden eller tredje uge i november for at hylde deres enevældige leder og kultfigur, V. Prabhakaran, der har fødselsdag i slutningen af måneden.

Angrebet mod Pooneryn-basen kommer ca. en måned efter Operation Yal Devi, hærens storoffensiv der krævede flere end 100 dræbte og gjorde mange civile hjemløse.

Dengang blev præsident Wijetunga af liberale kritikere beskyldt for at søge en militær løsning på en krig, som ingen kan vinde, og han blev tvunget til at afblæse operationen efter otte dage. Men han har fortsat talt om et »terroristproblem« og nedtonet krigens etniske karakter, hvilket umuliggør en genoptagning af forhandlingerne.

Wijetunga blev længe anset for at være en due og blev hyldet for sin politiske liberalisering og ønske om at afslutte borgerkrigen. LTTE har siden 1980ernes begyndelse kæmpet en væbnet kamp for at få en selvstændig tamilstat i den nordlige og østlige del af Sri Lanka.

Krigen er blevet udkæmpet mellem to fuldstændigt hensynsløse og brutaliserede styrker.

INFORMATION - 12.11.93

# பிள்ளையாரை பூதம் என்று சொல்லலாமா?

சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் இந்து மதத்தை அவமானப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அந்த நாட்டில் பொம்மைகளை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனம் நாம் போற்றும் பிள்ளையாரை ஒரு விளையாட்டு பொம்மையாக்கி விற்பனை செய்தது. அது தப்பில்லை. ஆனால் அதனை ஒரு பூதத்தின் பொம்மை என்றும் குறிப்பிட்டு இருந்தது தான் சிக்கலை உண்டுபண்ணியது.

கேரளாவில் எங்கோ ஒரு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து பரத நாட்டிய கலைஞராக தற்போது இங்கிலாந்தில் வாழும் சித்ரலேகா போவார். ஒரு நாள் அவரது 11 வயது மகன் அஸ்வின் தீப்பெட்டி பொம்மைகள் வரிசையில் பூதங்களைப் பற்றிய பொம்மைகளை வாங்கி வந்த போது அதில் பிள்ளையார் பொம்மையும் இருப்பது கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தான். நாள்தோறும் பிள்ளையாருக்கு பூஜை செய்யும் அஸ்வினுக்கு தனது கடவுள் இப்படி பூதமென அழைக்கப்பட்டு இருப்பது அழுகை வரச் செய்து விட்டது.

அந்தப் பொம்மையுடன் வைக்கப்பட்டு இருந்த ஒரு துண்டு பிரசுரம் விநாயகரை 'இந்து மதத்தின் பானை வயிறும்' யானைத் தந்தமும், மனித உடலும் கொண்ட பூதம் என வர்ணித்து இருந்தது. அந்த பிரசுரத்தை பல துண்டுகளாக கிழித்து வீசினான் அஸ்வின். அந்த சிறு சிலையை தனது பூஜை அறையில் கொண்டு போய் வைத்துக்கொண்டான்.

## இங்கிலாந்தில் போராடிய இந்திய பெண்மணி!

சித்ரலேகாவையும் இந்த பிரசுரம் மிகவும் புண்படுத்திவிட்டது. நமக்கு என்ன என்று இருந்து விடவில்லை. பிள்ளையாரை இழிவுப் படுத்தி இருப்பதை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டு விட்டார் சித்ரலேகா.

அந்த் பொம்மைகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கணபதி, இந்துக்களின் மிக முக்கிய கடவுள்களில் ஒருவர் என்றும், கணபதியை அவர்கள் கம்பெனி இழிவுப்படுத்தி விட்டதாகவும் தெரிவித்தார்.

இதை ஏற்க மறுத்த அந்த நிறுவனத்தினர் அதைப் போலவே 'காளியின் பொம்மையையும் உருவாக்கி வருவதாகவும் அதற்கான பிரசுரம் காளியை அடிக்க தன் தோலை மாற்றும் பயங்கர பூதம் என வர்ணிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தனர்

இதைக்கேட்டு மேலும் கொதித்த சித்ரலேகா காளி அப்படிச் செய்வதில்லை என்றும் இந்து தெய்வங்களை பூதமென வர்ணித்து, அத்தெய்வங்களின் வழிபாட்டை பொம்மை உற்பத்தி நிறுவனம், தடை செய்ய முயல்வதாகவும் சித்ரலேகா குற்றம் சுமத்தினார்


ஆனால் அவருடைய இந்த விவாதம் எவ்வித பயனும் ஏற்படுத்தவில்லை. இதனால் சற்றும் தளராது சித்ரா பிரிட்டிஷ் அரசின் இன உறவு அலுவலகத்துடனும் ,வானொலி நிலையத்துடனும் தொடர்பு கொண்டு, இந்து மதத்தினருக்கு இழைக்கப்பட்ட அநீதியை விளக்கினார். அவரது தோழியர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இந்து மதத் தலைவர்களும் இந்த கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்தனர். எல்லோரினதும் ஏகோபித்த குரல் தெளிவாகவும் உரக்கவும் எதிரொலிக்கத் தொடங்கியது.

பெருகி வரும் எதிர்ப்பை உணர்ந்த பொம்மை உற்பத்தி நிறுவனத்தினர் கணேசர் பொம்மையிலும் பிரசுரத்திலும் சில மாற்றங்கள் செய்ய முன் வந்தனர். ஆனால் அதனை சித்ரலேகா ஏற்றுக்கொள்வதாக இல்லை. அந்த உற்புத்தி நிறுத்தப்பட்டு ஏற்கனவே கடைகளுக்கு அனுப்பப்பட்ட பொம்மைகள் திருப்பி எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். வேறு வழியின்றி அந்த கம்பெனியர் விநாயகர் பொம்மை சிலையின் உற்பத்தியை நிறுத்தி, கடையில் இருந்த பொம்மைகளை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டனர்.

சித்ரலேகாவின் மனஉறுதி, இந்துமதத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை கழுவி விட்டது.

நிவாசினி

- வீரகேசரி -



"ஊரோடு மாப்பிள்ளை எடுத்ததாகக் கேள்வி - என்ன சீதனம்?

"ஊரோடு ஒரு கடை - 10 பரல் மண்ணெண்ணெய்!"

எங்கள்
தோட்டத்து மலர்களுக்கு வானம் பொழிவதில்லை

ஈரம்

அவர்களது கண்களிலும்
நின்று போகாமல் அடித்துக்கொண்டிருக்கும்
இதயத்திலும் மாத்திரம் தான்
வயிற்றில் இல்லை!

வழமைபோல்
மண்ணிலே கூட்டாஞ்சோறாக்கி
கூடியிருந்து
சுவைத்து உண்பதுபோல் அபிநயித்து
அன்றைய பொழுதை ஏக்கத்திற் கரைப்பார்கள்

நாளையும்
இந்த வானம் பொய்க்கக்கூடும்
ஆனால்
இந்த மணற்பரப்பில்
அவர்கள் கூடியிருந்து
கூட்டாஞ்சோறாக்கி உண்பார்கள்
வலுவின்றிப் பொழுதைக் கழிப்பார்கள்

நாளை மறுதினமும்
இரக்கமற்ற வானம் இப்படியே இருக்கக்கூடும்
ஆனால்
நீங்கள் ......

-ஜெயா

நன்றி:- T.R.O.

## *சிங்கள இனவாதத்தின் சுயரூபம்*

இலங்கையில் இனப்பிரச்சனையே இல்லை;
இருப்பது என்னவெனில் "பயங்கரவாதப்
பிரச்சனையே" இவ்வாறு சிறிலங்கா
ஜனாதிபதி பல தடவைகள் சொல்லிவிட்டார்.
ஜனாதிபதியின் இக்கூற்றை தீவிர
சிங்கள இனவாதி எனக்கருதப்படும் காமினி
ஜெயசூரியா பாராட்டியுள்ளார்.
பாராளுமன்றத்தில் உள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள்
பலரும் இக் கொள்கையைப் பகிரங்கமாக
ஆதரிக்கத்தொடங்கினர். இது குறித்துத்
தமிழ் மக்கள் ஆச்சரியமோ அங்கலாய்ப்போ கொள்ள
வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இதுதான் சிங்கள
இனவாதத்தின் சுயரூபம். இதனைப்
புரிந்துகொள்ளமுடியாத அளவிற்கு
தமிழர்கள் முட்டாள்கள் இல்லை. சர்வதேச
சமூகத்தையும் ஏமாற்றிவிட முடியாது.
அண்மையில் லண்டனில் நடந்த மகாநாடு
ஒன்றில் ஜெம்ஸ் மேனர் என்ற, இலங்கைப்பிரச்சனை
குறித்து ஆழ்ந்த அறிவுள்ள அறிஞர்
"இலங்கையில் இருப்பது ஒரேயொரு
பயங்கரவாதமே அது அரச பயங்கரவாதம்"
என்று தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

- திருமகள் -

# ஆமி அடிச்ச ஷெல்
# அதிர்ச்சியிலே பிறந்தவனே!
# ஆராரோ ஆரிவரோ!

"மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே மாமன் அடித்தானோ..." என்றுன்னைச் சீராட்டி தக்காளிப்பழரசமே தாலாட்டு நான் பாட இத்தாலி கனடாவில் இருக்கிறார் மாமி மாமா ஆமி அடிச்ச ஷெல் அதிர்ச்சியிலே பிறந்தவனே மாமி மாமன் போன தேசம் கேட்கும் வரை கதறிஅழு.

தொப்புள் கொடியோடு தொடர்புகள் அறுத்திங்கே நிப்புள் பால்பவுடர் விலையறியாப் பிறந்தவனே ஓடிக்கலோன் பவுடர் கிறேப்வாட்டர் கிறீம் தேடி ஓடிக்களைத்தேன் நான் ஓயாமல் உனக்காக. காமன் விட்டகணை களிப்பினிலே உதித்தவனே சாமான் விற்கும் விலை சரியும்வரை கதறியழு.

ஊர்விட்டு ஓடுகையில் போர்க்கால சூழ்நிலையில் வேர்விட்டு பதிந்தவனே பேர்சொல்லப் பிறந்தவனே அகதியாய் வந்தவேளை அவதியாய்ப் பிறந்தவனே சகதியில் வந்துதித்த சந்தனமே சர்க்கரையே நிவாரணம்ட்டையில் நின் பெயர் பதியும்வரை நிர்வாண உடம்போடு நிதமும் நீ கதறியழு.

சண்டைத் துவக்குபொம்மை சர்க்கரை இனிப்புவகை இண்டைக் குமக்குத்தர இலங்கை யரசு தடை பண்டைத் தமிழ்பாலன் சிங்கக் குட்டிகளின் சிண்டைப் பிடித்திழுத்து சிரித்து விளையாடினானாம் உண்மைத் துவக்கோடு விளையாடும் நாள்வரை தன்மானம் இழந்ததமிழ் மக்களுக்காய் கதறியழு.

எஸ். ஜே. பி. ரட்ணதுரை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
TAMILS REHABILITATION ORGANIZATION
போசாக்கு புனர்வாழ்வு நிலையம்
NUTRITION REHABILITATION CENTRE

www.padippakam.com



# குழந்தைகளின் போஷாக்குநிலை

வைத்தியகலாநிதி ந. சிவராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமுகமருத்துவத்துறை
மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற குழந்தைகளிற் பலர் ஒரு மலைக்குன்றையோ ஒரு நீர்வீழ்ச்சியையோ அல்லது ஓர் ஆற்றையோ ஒருபோதும் கண்டிருக்கமாட்டார்கள். ஆயினும் அவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது மிகவும் உயர்ந்த போஷாக்குநிலையை அனுபவித்துவந்துள்ளனர்.

அமெரிக்காவின் சுகாதாரக்கல்விக்கும் நலன்பேணலுக்குமான திணைக்களம் இலங்கை சுகாதார அமைச்சுடனும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து மேற்கொண்ட இலங்கையின் போஷாக்குப் பற்றிய 1975/76 ஆம் ஆண்டின் ஆய்வு யாழ்ப்பாணத்து பள்ளிமுன்னிலைப்பிள்ளைகள், நாட்டின் ஏனைய பகுதிச்சிறார்களிலும் பார்க்கக் கூடிய போஷாக்குத் தரத்தை அனுபவிப்பவர்கள் எனச் சுட்டிக்காட்டி நின்றது. இந்த ஆய்வின் படி யாழ்ப்பாணத்து பள்ளிமுன்னிலைப்பிள்ளைகளில் 3.7 வீதத்தினர் மாத்திரமே கடுமையான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டனர் என அறியப்பட்டது. அதேவேளை இலங்கையின் சராசரி கடுமையான போஷாக்குப்பாதிப்பின் நிலை 6.6 வீதமாக இருந்துள்ளது. இதேநேரம் காலி, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கண்டி போன்ற பகுதிகளில் பள்ளிமுன்னிலைப் பிள்ளைகளில் 8 % வரை கடுமையான போஷாக்குப் பாதிப்பிற்குள்ளாகியிருந்தனர்.

ஒருவேளை, இவ்வாய்வின் முடிவுகளின் காரணமாகத்தான் யாழ்ப்பாணத்தில் குழந்தைநல சேவைகளில் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்றங்கள் ஒரங்கட்டப்பட்டு, ஏனைய பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும். தென்பகுதியிலுள்ள பலசரக்குக்கடைகளில் விற்பனைக்காக அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் "திரிபோஷா" வினைக்கூட யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்துச் சிறார்களுக்கான சேவைகள் படிப்படியாக அலட்சியம் செய்யப்பட்டு கடந்த தசாப்தத்தில் இவர்களுடைய சுகாதாரநிலை மிகவும் சீர்குலைந்தது.

www.padippakam.com


உணவுப்பொருட்கள், மருந்துகள், திரிபோஷா, குழந்தைகள் - கர்ப்பிணித்தாய்மாருக்கான தடுப்புமருந்துகள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் அண்மைக்காலத்தில் இதனை மேலும் மோசமடையச்செய்துள்ளது. அடிக்கடி ஏற்பட்ட குண்டு, எறிகணை வீச்சுக்கள் இதற்கு மேலும் பங்களிப்புச்செய்துள்ளன. இது குழந்தைகளைத் தமது சொந்த இல்லங்களிலிருந்து அகதிமுகாம்களுக்கு துரத்திவிட்டுள்ளது. இதனால் இவர்கள் தங்களுடைய உணவுக்காக முதியவர்களுடன் போட்டியிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கை அரசும் யுனிசெப் தாபனமும் இணைந்து வெளியிட்ட (ஸ்ரீலங்காவின் குழந்தைகளும் பெண்களும் 1991, பக் 94, 95) வெளியீட்டில் வடக்கு-கிழக்கு மக்களின் 45.8% இடம்பெயர்ந்துள்ளார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி 340 000 குழந்தை அகதிகள் உள்ளார்கள்.

எஸ். ஏ. மீகமவும் ஏனையோரும் குறித்துள்ளபடி 1971 இல் ஏற்பட்ட பஞ்சத்தால் மரணவீதம் அதிகரித்தபோது ஆகக்கூடிய பாதிப்புக்குள்ளானவர்கள் குழந்தைகளும் வயோதிபர்களுமே என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இன்று யாழ்ப்பாணத்திற் பிறக்கும் 20 குழந்தைகளில் ஒரு குழந்தை தனது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாட உயிருடன் இருப்பதில்லை. அதாவது 5 வீதமான குழந்தைகள் ஓராண்டைப் பூர்த்திசெய்யும் முன்னரே மரணித்துவிடுகின்றனர்.

1982இல் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி (எம். ஓ. எச்) பிரிவில் இதன் ஆசிரியராலும் ஏனையோராலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்மூலம் கணக்கிடப்பட்ட குழந்தைகள் இறப்புவீதம் (ஐ. எம். ஆர்) 35.4 இற்கும் 50.0 இற்கும் இடையினதாக இருந்தது. இருப்பினும் இக்காலப்பகுதியில் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத்திணைக்களத்தால் யாழ்ப்பாணத்திற்கான குழந்தைகள் மரணவீதம் 18.0 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொக்குவில், கோண்டாவிற் பகுதியை உள்ளடக்கிய பல்கலைக்கழக வெளிக்களத்திட்டப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வின்படி குழந்தைகள் மரணவீதம் 42.9 ஆகவுள்ளது.

பல்கலைக்கழக வெளிக்களத்திட்டப்பகுதி, யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க சுகாதாரக் கவனிப்பு உடையது. ஆகவே ஒருவர் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதற்கும் கூடிய குழந்தைகள் மரணவீதத்தை எதிர்பார்க்கவேண்டும். ஆனால் 1990 இல் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான குழந்தைகள் மரணவீதம் 16.6 ஆகும். மேற்கூறிய ஆய்வுகளில் காட்டப்பட்ட குறைந்த குழந்தைகள் மரணவீதம் பதிவுக்குறைபாடுகளால் ஏற்பட்டதாகும். முன்னைய ஆய்வின்படி மூன்றில ஒரு குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படமுன்னரே இறந்துவிடுகின்றனர். அவை பெரும்பாலும் பதியப்படுவதில்லை. வைத்தியசாலை மரணங்கள் கூட அரைவாசி

www.padippakam.com



தான் பதியப்படுகின்றன. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல திருகோணமலை, மொனராகலை, வவுனியா, பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலும் கூட நிலவுகின்றது என எண்ணவேண்டியுள்ளது. இங்கெல்லாம் குறைந்த குழந்தைகள் மரணவீதத்தை சுகாதாரத்திணைக்களம் வெளியிடுகிறது.

ஏனைய ஆசிய நாடுகளிற்போலவே இங்கும் வயிற்றோட்டம், கடுமையான சுவாசக்கோளாறுகள் போன்ற தொற்றுக்கள் போஷாக்குக்குறைபாட்டால் இலகுவில் ஏற்படுவதால் குழந்தைகள் இறக்கிறார்கள். ஆயினும் இந்த நாடுகளில் சுகாதார அதிகாரிகள் ஒன்றிணைந்த முயற்சியை எடுப்பதன்மூலம் இவ்வகையான மரணங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆனால் இங்கு மருந்துகள் மற்றும் குழந்தை உணவுகளுக்கான தடைகள் என்ற ரீதியிலும் குடும்பநல சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், உதவி வைத்திய அதிகாரிகள் போன்ற அடிமட்ட சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சிகளைக் குறைத்து தடைகளை ஏற்படுத்துவதன் மூலமும் மரணங்களை அதிகரிக்க வழி வகுக்கப்படுகின்றது. 1980 இற்குப்பின் யாழ்ப்பாணத்தில் உதவி வைத்திய அதிகாரிகளின் பயிற்சிக்கு ஒருவரும் சேர்க்கப்படவில்லை குடும்பநலசேவையாளர்களும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் குறைந்த அளவிலேயே பயிற்றப்பட்டுவருகிறார்கள்.

குழந்தைகள் நல நிலையங்களில் பணியாற்றுபவர்கள் அங்கு வருகின்ற குழந்தைகளில் போஷாக்குக் குறைபாடுடையவர்களின் அதிகரிப்பை அண்மைக்காலத்தில் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. மரஸ்மஸ் குவாசியோகோர், கடுமையான விற்றமின் A குறைபாடு, இரத்தசோகை என்பன முன்னர் காண்பதற்கரியனவாக இருந்த நிலை மாறி இவ்வகையான நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை நாள்தோறும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

1992 ஆம் ஆண்டு சிறுவர் பாதுகாப்புநிதியம் (ஐக்கிய இராச்சியம்) தங்களால் பராமரிக்கப்படும் கெற்பலி அகதிகள் முகாமில் குழந்தைகள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டனர். இதில் 332 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டனர். 6.8 வீதக் குழந்தைகள் எதிர்பார்க்கப்பட்ட உயரத்துக்குரிய எடையில் குறைவுபட்டுக் காணப்பட்டனர். இது அண்மையில் ஏற்பட்ட போஷாக்கின்மைக்கான எடுத்துக்காட்டாகும். இவ்வெண்ணிக்கை 3ம் உலகைச்சேர்ந்த பஞ்சத்தால் வாடும் சில நாடுகளுடன் ஒப்பிடும்போது பிரச்சனைக்குரியதாகக் கருத முடியாததாக விவாதிக்க முடிந்தாலும் 1975-76 இல் 3.7 வீதமாக இருந்ததைக் கவனத்திலெடுக்கவேண்டும். இது இன்றுள்ள நிலையில் கிட்டத்தட்ட அரைப்பங்கினதேயாகும். பல நாடுகளில் போஷாக்குநிலை முன்னேறியுள்ள நிலையில் யாழ் மாவட்டத்தில் குழந்தைகளின் நிலை மோசமாகிக்கொண்டே போகிறது.

1991 ஐப்பசி மாதம் யாழ் சுகாதார வைத்திய அதிகாரி மாநகரசபைக்கு

www.padippakam.com



உட்பட்ட பல அகதிமுகாம்களில் வாழும் 01-04 வரை வயதுக் குழந்தைகளைக் கொண்ட ஆய்வு ஒன்றினை நடாத்தியுள்ளார். 644 குழந்தைகளைப் பரிசோதித்ததில் 73 வீதக் குழந்தைகள் வயதுக்கேற்ற எடையில்லாது வளர்ச்சி அட்டவணையில் குறைந்த நிலைக்குக் கீழ் உள்ளனரெனக்கண்டனர். இதேபோல் யாழ். மாநகரசபையின் ஒரு பகுதியில் வாழுகின்ற 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை 1992 அக்டோபரில நிறுத்தபோது அவர்களில் 58 வீதம் போஷாக்கின்மையாற் பாதிப்படைந்தது தெரியவந்தது. இது இவ்வாறிருக்க 1990 ஆம் ஆண்டறிக்கையில் குடும்பநலன் காப்பகம் ஸ்ரீலங்காவிற்குரிய நிலையை 34.7 வீதமாகக்குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு ஆய்வுப்படி ஒரு குழந்தையின் போஷாக்கு அது பிறப்பதற்கு முன்னரேயே பாதிக்கப்பட்டுவிடுகிறது. சிறுவர் பாதுகாப்புநிதியம் (ஐக்கிய இராச்சியம்) இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் (யாழ்.கிளை) என்பவை இணைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொண்ட ஆய்வின்படி குறைந்த எடையுள்ள (2500 கிறாம் இற்கு உட்பட்ட) குழந்தைகளின் பிறப்பு அதிகரித்துள்ளது. 1991 ஐப்பசி மாதக் காலப்பகுதியில் பிறந்த குழந்தைகளில் 23 வீதத்தினர் குறைந்த எடையுள்ளவர்கள். 1989 இல் இதேகாலத்திற்குரிய கணிப்பின்படி (இது ஒரளவான சாதாரணமான காலம்) 19 வீதத்தினர் தான் குறைந்த எடையுள்ளவர்களாகக் காணப்பட்டனர். இப்படியான நிலை மிகவும் முன்கூட்டியே ஆரம்பித்திருக்கவேண்டும். குடும்ப சுகாதார நலன்பேணும் மையத்தின் ஆண்டறிக்கையின் படி 1988 இல் யாழ்ப்பாண வைத்தியசாலையில் பிறந்த குறைந்த எடையுடைய குழந்தைகளின் வீதம் 15.9 ஆக இருந்துள்ளது. 1989 இற்கும் 1991 இற்கும் இடைப்பட்ட காலத்தில் எடைகுறைந்த குழந்தைகளின் பிறப்புவீதம் 21 வீதத்தால் அதிகரித்துள்ளது.

மானிப்பாய் சுகாதாரப்பிரிவில் உள்ள குடும்பநலப்பணியாளர் ஒருவரால் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அகதிமுகாம்களிலும் கிராமத்திலுமாக தான் சேவையாற்றும் பகுதியில் 01-04 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் போஷாக்குநிலையைக் கவனித்துள்ளார். இதற்கு நடுக்கைச் சுற்றளவு அளவுமுறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கிராமத்தில் 60 வீதமானவர்களும் அகதிமுகாம்களில் 74.5 வீதமானவர்களும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கக்காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக் குழந்தைகளுக்கு வேண்டிய மாமிசப் புரதத்தை முக்கியமாக முட்டைகளில் இருந்தும் மீனிலிருந்தும் தான் பெற்றுவந்தார்கள். கோழித்தீன்மீது போடப்பட்டிருக்கும் தடையினாலும் பழுதடையக்கூடிய பொருட்களை விரைவில் எடுத்துவருவதில் உள்ள தடையாலும் முட்டையின் விலை பெரும்பாலான பெற்றோர்களின் வாங்கும் திறனுக்கு அப்பாற்பட்டதாகிவிட்டது. யாழ். குடாநாட்டைச் சுற்றி

www.padippakam.com



மீன்பிடி கடுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தின் மீனின் மொத்தத்தேவை 6, 600 மெற்றிக்தொன் ஆகும். ஆனால், 1991 இல் மொத்த மீன்பிடி 1, 094 மெற்றிக்தொன் ஆகும். இது மொத்தத்தேவையின் 16.6 வீதம் ஆகும். எனவே போஷாக்குக் குறைபாட்டுக்குள்ளாவது ஆச்சரியப்படக்கூடியதல்ல. யாழ்ப்பாணத்துக் குழந்தைகளின் போஷாக்குநிலை மிகவும் மோசமடைந்துள்ளது.

குழந்தைகளுக்குத் தங்களுடைய நிலைபற்றிக் குரல்கொடுக்கக்கூடிய தொழிற்சங்கங்களோ அல்லது அரசியற் பிரதிநிதித்துவமோ கிடையாது. எம் போன்ற முத்த குடியினரே இதில் குறுக்கிட்டு கீழ்நோக்கிச் செல்லும் இப் போக்கினைத் தடுக்கவேண்டும். எத்தியோப்பியா போன்ற நிலை வரும்வரை நாம் காத்திருக்கமுடியாது. அவ்வாறு காத்திருப்போமாயின் குழந்தைகளை முந்திய நிலைக்கு கொண்டுவருவது ஒரு பூதாகாரமான காரியமாகிவிடும்.

இன்று நாம் தலையிடவில்லையென்றால் எம் பிற்சந்ததி எம்மீது குற்றம் சுமத்துவது திண்ணம்.

சிலியின் நோபல் பரிசுபெற்ற கவிஞர் கபிரியேல் மிஸ்ரல் என்பவரின் சொற்களில்:

"நாம் பல தப்புக்களையும் தவறுகளையும் செய்திருக்கின்றோம்
அவற்றுள் மிக மோசமான குற்றம்
- எமது குழந்தைகளை அநாதரவாக விட்டதுதான்
அதனால் வாழ்க்கையின் முளையையே புறக்கணித்துவிட்டோம்
எங்கள் தேவைகள் பலவற்றைத் தள்ளிப்போடலாம்
குழந்தைகளின் தேவைகளைத் தள்ளிப்போடமுடியாது
இப்பொழுதுதான்
- அவன் எலும்புகள் உருவாகின்றன
- அவன் குருதி உற்பத்தியாகத் தொடங்குகின்றது
- அவன் உணர்வுகள் வளர்கின்றன.
அவனுக்கு நாங்கள் நாளை என்று சொல்லமுடியாது
ஏனெனில்,
அவன் பெயர்: இன்று.

**கொழும்பில் படித்துக் கொண்டிருந்த தன் மகனைப் பார்க்கப் போன தம்பர் கண்ட காட்சி.**
**போத்தலும் கிளாசும், சீட்டு விளையாட்டுமாய் மகனை.......**
**உடனே தம்பர் சொன்னார்:**
**"யாழ்ப்பாணத்தில் கொம்மா மூன்று மிளகும் தண்ணீரும்...... இஞ்சை நீ முன்நூற்றி நாலும் தண்ணியும்......."**

www.padippakam.com


# இன்றைய ஜனநாயகம்

- த. நடராஜா -

ஜனநாயகம், பொதுவுடைமை. முதலாளித்துவம், சர்வாதிகாரம் எனப்பலவகையான ஆட்சிமுறைகள் இன்று உலகில் நடைமுறையில் இருக்கின்றன. ஆனால் இவைகளின் செயற்பாடுகள் உலகில் இருக்கும் ஒவ்வொரு நாட்டின் நிர்வாகத்துக்கும் பொருத்தமாகவோ ஏற்புடையதாகவோ வகுக்கப்பட்டோ வரைவிலக்கனப்பட்டோ செயற்படுவதைக் காணக்கூடியதாக இன்று இருக்கிறது. அவ்வாறு அமைந்ததே இன்றைய ஜனநாயகம். உதாரணமாக கீழ்காணும் நாடுகள் 1993ம் ஆண்டு மனிதஉரிமைமீறல் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் முன்னணி வகுப்பதை பலதரப்பட்ட செய்திகள் வாயிலாகக்காணலாம். அவையாவன இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பர்மா, அங்கோலா, கம்போடியா, அயர்லாந்து, யூகோசலாவியா, தென்னாபிரிக்கா, சோமாலியா முதலியன. இன்று ஜனநாயகம் உலகின் பலகோணங்களிலும் பலதரப்பட்ட வேறுபாடுகளையுடையதாகவே காணப்படுகிறது. ஜனநாயகத்தில் முக்கியமாக அடங்குபவை பேச்சுச்சுதந்திரம், பத்திரிகைச்சுதந்திரங்கள் ஆகும். இது விடையமாக உலகில் நடைமுறையில் உள்ள இன்றையநிலையை ஓரளவுக்கு வெளிப்படையாக ஒழிவு மறைவின்றிக்கூறிவருவது அகில உலகரீதியாக அமைந்த சர்வதேச மன்னிப்புச்சபையாகும். இச்சபையானது வருடாவருடம் தனது அறிக்கையை புத்தகவடிவிலும் வெளியிட்டுவருகிறது. இவ்வறிக்கைமூலம் ஜனநாயகத்தைப்பற்றியும், ஜனநாயகத்தின் பேரால் நடைபெறும் வேறுபட்டசெயற்பாடுகளையும் ஓரளவுக்கு அறியக்கூடியதாகஇருக்கும். உதாரணமாக 1992 ம் ஆண்டு தை மாதத்திலிருந்து மார்கழி முடியும்வரையிலான அறிக்கை 1993 இல் அச்சிடப்பட்டு புத்தகவடிவில் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை உலகில் எந்தவொருநாட்டிக்கும் விதிவிலக்கு அளிக்கவில்லை இவ்வாண்டின் அறிக்கையின் முன்னுரையில் ஜனநாயகத்தின் பொருள் அமைந்தவிடையமாகும். அதாவது "மனித உயிர்களுடன் விளையாடும் அரசியல்" இதன் சரியான அர்த்தத்தைப் புரிந்துகொண்டால் மக்களே ஜனநாயக அரசை நிறுவமுடியும்.

இன்று ஜனநாயகம் இலங்கையில் என்ற தலைப்பை எடுத்துக்கொள்வோம். இன்று தமிழ் மக்களுக்கு எதிராக பௌத்த சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்தை சிங்கள அரசு ஜனநாயக முலாம்பூசி அதனை நியாயப்படுத்த முனைவதையும் இதற்குத்துணையாக சில தமிழ்க்குழுக்கள் செயற்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்ட இந்தயுத்தத்தை தமிழ் மக்கள் இராணுவரீதியான தற்பாதுகாப்பிற்காகவும் நிரந்தர விடுதலைக்காகவும் போராடிவருவது உலகறிந்த உண்மையே. இது தொடர்பாக சிங்கள

விரிவுரையாளர் ஒருவர் சில வாரங்களுக்குமுன் பத்திரிகையில் விடுத்த அறிக்கையில் ஒரு நாட்டில் இரு இனங்களுக்கிடையில் இராணுவப்போராட்டம் தொடர்வதே இரு தேசங்கள் உண்டு என்ற உண்மை யதார்த்த நிலையை காட்டுவதாக குறிப்பிட்டிருந்தார்.

தமிழர்களின் அடிப்படை ஜனநாயக உரிமையையும் நிரந்தர பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக தொடரும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்கமுயலும் சிங்கள அரசு தமது நடவடிக்கைகளை சட்டரீதியாக்கி நடாத்தப்படும் அடாவடித்தனங்களுக்கெல்லாம் பெயர் ஜனநாயகம். உதாரணமாகப் பிரஜைகள் காணாமல் போவதும், திடீரெனக்காணாமல் போவதும், தடுத்துவைக்கப்படுவதும், சித்திரவதைப் படுத்துவதும், வதைமுகாங்களில் யாரும் அறியாவண்ணம் தடுத்து வைத்திருப்பதும், பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும், தமிழ்மக்களின் பிரதேசங்களில் யுத்தம் நடைபெறும் காலங்களில் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி சர்வதேசரீதியாக தடைசெய்யப்பட்ட குண்டுகளை வீசி அழிப்பதும், எறிகணை பீரங்கி போன்றவற்றால் பொதுமக்களை படுகொலை செய்வதும், அவர்களின் அகராதியின் பிரகாரம் ஜனநாயகம். இவை எல்லாவற்றிற்கும் கூட்டுமொத்தமாகச் செயற்படுத்துவதுதான் பலவருடங்களாக நீடிக்கும் பொருளாதாரத்தடை.

www.padippakam.com


இவ்வுண்மைகள் பத்திரிகை வாயிலாகவும் மனிதவுரிமை மீறல்கள் அறிக்கைவாயிலாகவும் வருவதை எந்த அரசாலும் தடுக்கமுடியாது.

ஜனநாயகத்தின் தலையெனக்கருதப்படுவதுதான் ஐ.நா சபை. இதில் வல்லரசுகள் முதல் மாலைத்தீவுவரையிலான சிறியநாடுகள் வரை அங்கம் வகிக்கின்றன. இச்சபையில் அங்கம் வகிக்கும் அநேகமான நாடுகள் இலங்கைத்தீவில் இரு இனங்களுக்கிடையே நடைபெறும் போரை அறிந்திருந்தும் மௌனமாக இருப்பதுஉலகறிந்த உண்மையே. இதைவிடவும் இலங்கை அரசாங்கத்துக்கு போரைத்தொடர்ந்து நடத்தி ஒரு இனத்தை அழிப்பதற்கு கடனுதவி வழங்க சிபார்சு செய்பவர்களும் இவ்வங்கத்தவர்களே. இதில் ஒரு வேடிக்கையாதெனில் சிங்கள அரசு கடனுதவி பெற்று போர்த்தளபாடங்களை வாங்கும் பொழுது அதன் ஒரு பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளை சென்றடைகின்றது என இலங்கைப்பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தது கவனத்தில் கொள்ளவேண்டும். ஐ.நா சபையால் செயற்படவைப்பவர்களின் தாளத்திற்கு ஆடிக்கொண்டிருப்பதைத்தவிர என்னதான் செய்யமுடியும். ஜனநாயகரீதியாக ஒரு சில நாடுகள் இலங்கைத்தீவில் நடக்கும் இனப்போரை சமாதானமுறையில் தீர்விற்கு கொண்டுவரும் தீர்மானத்தை ஐ.நா சபையில் முன்வைக்க முனைந்தாலும் இத்தீர்மானத்தை தடைசெய்யும் நாடுகளின் பிரதிநிதிகளும் அடங்குவர். இலங்கையில் நடக்கும் இன அழிப்புப்போரைப்போன்றதே பொஸ்னியாவில் நடைபெறும் யுத்தம். இப்போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென அமெரிக்க வல்லரசும், மேற்குலக நாடுகளும் போட்டிபோட்டு வருகின்றன. முக்கிய நோக்கம் அழிவையும் அகதிகள் உருவாகுவதையும் தடுப்பதே. ஆனால் இலங்கைத்தீவில் இராணுவத் தீர்வை நோக்கமாக. கொண்டு இன அழிவை மேற்கொள்ளும் சிங்கள அரசுக்கு பொருளாதாரரீதியில் உதவி யுத்தத்தை தொடர வழி செய்வதோடு சொந்தமண்ணில் தமிழ் மக்களை அகதிகளாக்கி அதேசமயம் மேற்குலக நாடுகளில்

www.padippakam.com


தஞ்சம் புகுந்த தமிழ் அகதிகளுக்கு நெருக்கடிகளையும் கொடுத்து வருகிறது. பொஸ்னியாவில் நடக்கும் யுத்தத்தின் அழிவுகளோடு இலங்கையில் நடக்கும் யுத்தத்தின் அழிவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கை யுத்தத்தின் அழிவுகள் பலமடங்கு அதிகம். பலநாட்டு மக்களுக்கு இலங்கையில் நடக்கும் இனப்பிரச்சனை தெரியவில்லை. அதிஸ்டவசமாக சில தினங்களுக்கு அமெரிக்க செய்திநிறுவனமான CNN இல் இலங்கையின் இனப்பிரச்சனை சம்பந்தமாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது. அதில் இலங்கையில் வெளிநாட்டமைச்சர் சாகுல் ஹமீத்தினதும், அகில உலக தமிழ்ராஜ நடேசன் சத்தியேந்திராயினதும் பேட்டியினதையும் காண்பித்து வடகிழக்கு பகுதிகளில் நடைபெறும் போரையும், பொஸ்னியாவில் நடைபெறும் போரையும் காண்பித்து இரு நாடுகளிலும் நடைபெறும் யுத்தம் இனங்களுக்கிடையிலான மண்மீட்புப்போர் என்பதனை அறிவிப்பாளர் தெரிவித்து முடிவில் பொஸ்னியாவில் நடைபெறும் போரை உலகநாடுகள் கவனிக்கின்றன. இலங்கையில் நடைபெறும் போரை பற்றி யாருமே அக்கறைப்படுவதில்லை. இதுவே இந்த இரண்டு யுத்தங்களுக்குமிடையிலுள்ள வித்தியாசம். மேற்குறிப்பிட்ட செய்தி பல தடவைகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

ஜனநாயகத்தின் மற்றும் ஒரு செயல்பாடுதான் இன்று ருசியாவில் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அந்நாட்டு ஜனாதிபதிக்கும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் ஏற்பட்ட அதிகாரப்போட்டியின் விளைவு ஜனாதிபதி முன்னறிவித்தல் இல்லாமலே பாராளுமன்றத்தைக்கலைத்தார். அங்கத்தவர்கள் வெளியேற மறுத்தார்கள். அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் பலாத்காரத்தைப் பாவிக்காமல் ஜனநாயகரீதியாக சமாதானத்தை காணவேண்டுமென்று ஜனாதிபதியை கேட்டுக்கொண்டார்கள்.

www.padippakam.com


இறுதியில் பலாத்காரமே வென்றது. ருசிய ஜனாதிபதி தனது இராணுவத்தை அனுப்பி பாராளுமன்ற கட்டடத்தையே தகர்த்தும், அங்குள்ளவர்களை கைது செய்தும் கொன்றும் பிரச்சனையை தீர்த்துக்கொண்டார்கள். இச்செயலை சரியென

மேற்குலக நாடுகள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

இதேபோன்று 1989 இல் சீனதேசத்தின் சென்சதுக்கத்தில் (Tian an men square) பல்லாயிரக்கணக்கான சீனமாணவர்கள் ஜனநாயககோஷமிட்டு பல நாட்களாக நடந்த போராட்டம் சீன இராணுவத்தால் பலாத்காரமாக அடக்கி ஒடுக்கப்பட்டது. இதனை இதே மேற்குலகநாடுகள் ஜனநாயகத்தின் பெயரால் வன்மையாக கண்டித்தன. சோமாலியாவில் பஞ்சத்தில் வாழும் மக்களை பாதுகாக்கவென சென்ற ஐ.நாப்படை அதே மக்களை நூற்றுக்கணக்கில் கொல்வதும் ஜனநாயகத்தின் பெயரால்தான். இன்று உண்மையான ஜனநாயகம் நடைமுறையில் செயலற்றுப்போய் இருக்கிறது. அநீதியும் அதர்மமும் நீண்ட நாட்களுக்கு தலைதூக்கியதாக சரித்திரம் இல்லை.




STUMBLING BLOCKS ON THE ROAD TO PEACE No 3 in a series

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Tamilsk Dansk Venskabsforening

Danmarksgade 10

7500 Holstebro

POSTBESØRGET AVIS
7400 HR. 58599



விடுதலைக்கு விருது சுமக்க
வேண்டிய தோள்கள்-

**Dansk-Tamilsk Venskabsforening**
**டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம்**
**Danish Tamil Friendship Association**
**PO Box 313 . DK-7400 Herning . Tel. 97 12 55 93 . Giro no. 7 84 59 52**

படிப்பகம்